## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018

## உடல் வலிமையிழப்பிற்குறுப்பட்ட நபர்களால் விஷேட போக்குவரத்து வசதியொன்றைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம்

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் முதன்மைச் கட்டளைச் சட்டத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட 82(எ)4(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடல்வலிமையிழப்பு காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வர முடியாதவராக இருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானாகவோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேறொருவர், வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினாலோ விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்க முடியும்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக அதாவது **2018.02.03** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்குமாறு சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகுமென்பதோடு தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விஷேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம்.

03. விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடல் வலிமையிழப்புக்குட்பட்டிருப்பின் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இலகுவாயிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் / பதிவு செய்த அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியர்களிடமிருந்து இதற்கான மருத்துவச் சான்றிதழை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். தனிப்பட்ட மருத்துவர்களிடமிருந்து (மேலைத்தேய அல்லது சுதேச) பெற்றுக் கொள்ளும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும், பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

04. 2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இத்துடனுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை **தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்குச் (உள்ளூர் அதிகார சபை)** சமர்ப்பித்தல் வேண்டும்.

**மஹிந்த தேசப்பிரிய**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2018.01.19

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**
**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)**

**82(எ) 4 (ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கென உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்**

.......................................................................... சபையின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு
(உள்ளூர் அதிகார சபையின் பெயர்)

(1) உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவரின் விபரம் : ..........................................................
..........................................................................................................................

(அ) முழுப் பெயர்:..........................................................................................

(ஆ) அஞ்சல் முகவரி : ..........................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு உள்ளூர் அதிகார சபை, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்) : ..........................................................................
..........................................................................................................................

(2) உடல் வலிமையிழப்பு பற்றிய சுருக்கமான விபரம் : ..................................................

(3) உடல் வலிமையிழப்புக்குட்பட்டவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும் :..................................................
..........................................................................................................................
..........................................................................................................................

(4) இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கையொன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர் :..........................................................................................
பதிவிலக்கம் :..................................................................................................

(5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடல் வலிமையிழப்பு காரணமாக எனக்கு / உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவரின் மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதிகள் மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின் போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய் வருவதற்கென நான்/ உடல் வலிமையிழப்பிற்குட்பட்டுள்ள மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான அனுமதியொன்றை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

..........................................................................
**உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவரின் / அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்**

திகதி : .....................